2012 ஏப்ரல் 16]

நகரத்தில் பல வருடங்களாகக் கால்நடை மருந்தகம் மட்டுமே இயங்கி வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் உள்ளது. திண்டிவனத்தைச் சுற்றியுள்ள 40 கிராமங்களிலிருந்து கால்நடைகளை அழைத்துவந்து, வைத்தியம் செய்துகொள்கிறார்கள். எனவே, அதைக் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றார். அரசினுடைய விதிப்படி, அங்கே 10 ஆயிரம் கால்நடைகள் இருக்க வேண்டும். அங்கே ஆய்வுக் கூடங்கள் மற்றும் மருத்துவமனை கட்டுவதற்கு இடம் இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு 60 கால்நடைகள் அந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்து செல்ல வேண்டும். இப்படி அரசு விதிகளுக்குட்பட்டு அந்த மருந்தகம் இயங்குமானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. ஜானகிராமன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

98—

பயணியர் விடுதி

***4571—திரு. ஐ. ஜானகிராமன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, ஆரோவில் பகுதியில் சுற்றுலாத் துறைமூலமாக, பயணியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2012 ஏப்ரல் 16

முற்பகல் 10–45

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

ஆரோவில் நகரம் என்பது, உலக அமைதிக்காக, ஆன்மீக முறையில், உலகப் போர் வராமல் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அரவிந்தர் ஆசிரம சொசைட்டியால் உருவான சர்வதேச கூட்டு சமூக நகரம் ஆகும். இது 45 நாடுகளைச் சேர்ந்தவர்கள் வாழும் ஒரு நகரம் ஆகும். 28–2–1968 ஆம் நாளில் வேற்றுமையில் ஒற்றுமை என்பதை வலியுறுத்தி, உலக அமைதிக்காக 124 நாடுகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் நாடுகளிலிருந்து பிடி மண்ணை எடுத்து வந்து, கூட்டு முயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நகரம் ஆகும். ஆரோவில் நகரம், தமிழகத்தின் பெரும்பாலான பகுதியையும், புதுச்சேரி மாநிலத்தின் சிறிய பகுதியையும் உள்ளடக்கிய ஒரு இடமாகும். இந்நகரம் திண்டிவனத்திலிருந்து 30 கி.மீ. தூரத்திலும், புதுச்சேரியிலிருந்து 10 கி.மீ. தூரத்திலும் உள்ளது. இங்கே ஏற்கெனவே அரவிந்தர் ஆசிரம சொசைட்டியைச் சேர்ந்தவர்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு, குறிப்பாக வெளிநாட்டைச் சேர்ந்தவர்களுக்கு தங்கும் அறைகள், போக்குவரத்து மற்றும் உணவகம் ஆகிய வசதிகள் அனைத்தையும் செய்து தருகின்றனர். மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் புதிய ஹோட்டல்கள் கட்டும் திட்டம் தற்சமயம் இல்லை என்றபோதிலும், ஆசிய வளர்ச்சி வங்கி வழங்கும் கடன் உதவியுடன் கிழக்குக் கடற்கரைச் சாலை சுற்றுலாத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளவிருக்கும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரும் கோரிக்கையை நிறைவேற்ற, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாக இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. ஜானகிராமன் அவர்கள்.*

திரு. ஐ. ஜானகிராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் தலைவர்களின் அகரமாய், சிந்தனையில் சிகரமாய், செயல்திறனில் இமயமாய் விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா*

அவர்களின் பொற்பாதம் தொட்டு பணிந்து என் உரையைத் துவக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உரையா? கேள்வியைக் கேளுங்கள். உரையை ஆரம்பிக்காதீர்கள்.*

திரு. ஐ. ஜானகிராமன்: *கன்னிப் பேச்சு பேசுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கன்னிப் பேச்சா? இது கேள்வி நேரம். துணைக் கேள்வி மட்டும் கேளுங்கள். துணைக் கேள்வியே 10 பக்கமா?*

திரு. ஐ. ஜானகிராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் புகழ்பெற்ற அருள்மிகு திருவக்கரை வக்ரகாளியம்மன் ஆலயம், அருள்மிகு பஞ்சவடி ஆஞ்சநேயர் ஆலயம், மொரட்டாண்டி அருள்மிகு பிரத்தியங்கரா தேவி ஆலயம், இரும்பை அருள்மிகு மகா காளீஸ்வரர் ஆலயம் மற்றும் உலக சுற்றுலாத் தலமாக விளங்கும் ஆரோவில் தியான மண்டபம் போன்றவை உள்ளன. இங்கே, நாள்தோறும், ஆயிரக்கணக்கான பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்கின்றனர். இங்கு தங்கும் வசதி இல்லாததால், புதுச்சேரி சென்று தங்குகின்றனர். எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் இப்பகுதிக்கு வரும் பக்தர்களுக்காகப் பயணியர் விடுதி ஒன்றை அமைத்துத் தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Very good. *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பஞ்சவடி ஆஞ்சநேயர் கோயில், திருவக்கரை வக்ரகாளியம்மன் கோயில், பிரத்தியங்கரா தேவி கோயில், சனி பகவான் கோயில் போன்றவற்றில், பஞ்சவடி ஆஞ்சநேயர் கோயில், பக்தர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு தனியார் அமைப்பால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. திருவக்கரை வக்ரகாளியம்மான் கோயிலுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்கெனவே நிதி ஒதுக்கீடு செய்து, அங்கு வேண்டிய அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டு, இன்று பயன்பாட்டிலே உள்ளது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய வகையிலே வசதிகள் செய்ய ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[2012 ஏப்ரல் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. ஜானகிராமன், துணைக் கேள்வி கேளுங்கள்.*

திரு. ஐ. ஜானகிராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உளுந்தூர்பேட்டை தொகுதியிலே கூவாகம் அருள்மிகு கூத்தாண்டவர் கோயில் இருக்கின்றது. அங்கே, சித்திரைத் திருவிழா ஆண்டுதோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலிருந்தும் திருநங்கைகள், அங்கு, அந்தத் திருவிழாவிற்கு வருகின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கூவாகத்திற்கும், ஆரோவில்லிற்கும் எவ்வளவு தூரம்?*

திரு. இரா. குமரகுரு: *அருள்மிகு கூத்தாண்டவர் திருக்கோயிலுக்கு வருகின்ற திருநங்கைகள் தங்குவதற்கு விடுதியோ அல்லது கழிப்பறை வசதியோ மற்ற எந்த வசதியோ இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தக் கூவாகம் கூத்தாண்டவர் திருக்கோயிலைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து, அங்கே போதுமான வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநங்கைகளுக்கு அரசு சார்பாக மாதாந்திர உதவியும், அவர்கள் சுய உதவிக் குழு ஆரம்பிப்பதற்கான நிதி ஒதுக்கீடும் செய்து, அவர்கள் பொருளாதார ரீதியாக மேம்பட வேண்டுமென்ற எண்ணத்துடன் செயல்படும் மாண்புமிகு அம்மா*

2012 ஏப்ரல் 16]

அவர்களுடைய அரசு பல நலத் திட்டங்களை அறிவித்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல வருடந்தோறும் சித்திரா பௌர்ணமியன்று சுமார் இரண்டு இலட்சம் பயணிகள் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளாக அங்கே வருவது என்பது உண்மைதான். ஆகவே, இதனை மாண்புமிகு அம்மாவினுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அங்கே வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கு, இந்த நிதியாண்டிலேயே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், அந்த மாவட்டத்தில், பூவரசன்குப்பம் ஸ்ரீலட்சுமி நரசிம்மன் ஆலயப் பகுதியில், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, ஏற்கெனவே சுமார் 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டு, தற்போது அது பயன்பாட்டில் உள்ளதென்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணை ஒரு சுற்றுலாத் தலமாகும். அது தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்ற ஒரு இடமாக இருக்கின்றது. ஆனால், அங்குப் போதிய கழிப்பறை வசதியில்லை. குறிப்பாகப் பெண்கள் அந்த ஆற்றில் நீராடிவிட்டு உடைகள் மாற்றுவதற்கு ஏற்ற இடம் அங்கில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுலாத் தலமான மேட்டூர் அணையில், உடை மாற்றுவதற்குத் தனியாக ஒரு இடத்தையும், கழிப்பறையையும் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மேட்டூர் அணைப் பகுதியில் மத்திய அரசின் நிதி பெறப்பட்டு, தற்போது பூங்கா அமைக்கக்கூடிய பணிகள், தங்கும் இட வசதிகள்,

கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்யக்கூடிய பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளச்சல் தொகுதிக்குட்பட்ட குளச்சல் பகுதி வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாப் பகுதி. அங்கே இருக்கக்கூடிய பயணியர் விடுதி, சுமார் நூறு ஆண்டுகளுக்கு அதிகமாக பழமை வாய்ந்ததாக இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டிக்கொள்வது, அங்கு நவீன முறையில் ஒரு கட்டடத்தைக் கட்டித் தருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, கடந்த ஆட்சியில் மத்திய அரசு, மாநில அரசினுடைய நிதிகள் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு பணிகள் நடைபெறாமலேயே அந்த நிதிகளெல்லாம் திருப்பி அனுப்பப்பட்ட சூழ்நிலையில், தற்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அதனைப் பரிசீலனைக்கு எடுத்து, ஆவன நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நவீன கட்டடம் என்றுதான் கேட்டார். நவீன கட்டடம் என்பது தங்கும் விடுதியா, தங்கும் வசதியா அல்லது கழிப்பறை வசதியா என்பதை மிகத் தெளிவாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரக்கூடிய அந்தப் பகுதி, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன* infrastructure *தேவை என்பதை எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 16]

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதிக்குட்பட்ட சோத்துப்பாறை அணை, மஞ்சளாறு அணை, கும்பக்கரை அருவி ஆகிய இந்த மூன்றும் தினந்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து போகக்கூடிய இடங்களாக இருக்கின்றன. அவற்றைச் சுற்றுலாத் தலங்களாக அறிவித்து மேலும்* development *செய்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு வருவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கும்பக்கரை பகுதியில் அதிகாரிகள் சென்று ஆய்வு செய்தபொழுது, பெரும்பாலான பகுதிகள் வனத் துறைக்குச் சொந்தமான பகுதிகள் என்று தெரிவித்திருக்கின்றார்கள். சோத்துப்பாறை பகுதியையும், மஞ்சளாறு அணைப் பகுதியையும் நேரடியாக ஆய்வு செய்து, அங்கு அரசு சார்பாக இடம் ஒதுக்கக்கூடிய சூழ்நிலையில், அங்கு சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற கட்டமைப்பு வசதிகள் செய்ய, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. தோ.பெ. பூனாட்சி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

99—

பேருந்து வசதி

***8910—திரு. தோ.பெ. பூனாட்சி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—